4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 623 /2022 நாள்: 16.12.2024 வா.சா.2 – மணிகண்டன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை

மூர்த்தி, சரவணன் ஆகியோருக்கும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியும். அடமான கடன் தொகையை திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மூர்த்தி மற்றும் சரவணன் ஆகியோர் என்னுடைய உறவினர்கள். நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள்தாம். செந்தில் குமார் எங்கள் ஊரை சேர்ந்தவர் தாம். அவருடைய தம்பி சிவக்குமார் எனக்கு பழக்கம் தான். நான் மாங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய வருமானம் குறித்து குறிப்பிட்டு சொல்ல முடியாது. வழக்கில் சொல்லியுள்ள முகவரியில் தான் பிரதிவாதிகள் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் குடும்பத்தினரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் எனக்கு செந்தில்குமாரை தான் தெரியும். பிரதிவாதிகளை பற்றிய விவரங்கள் தெரியாது. செந்தில்குமாரின் தாயார் உயிருடன் இல்லை. அடமான பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து செந்தில்குமாருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் தெரியாது. அது அவர் பெயரில் தான் உள்ளது. சொத்தின் மூல பத்திரம் எதையும் நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் பணம் கொடுக்கும் வரை அந்த தோப்பை நாங்கள் அனுபவித்துக்கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அவ்வாறு நாங்கள் தோப்பை அனுபவித்துக்கொள்ளலாம் என்று வாசகங்கள் காணப்படவில்லை என்றால் சரியல்ல. ரூ.18லட்சத்திற்கு காசோலை மூலமும் மீதி ரூ.2லட்சம்

ரொக்கமாகவும் பணம் கொடுத்துள்ளோம். நான் குறிப்பிட்டு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று, அடமான பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதப்படவில்லை. காசோலை மூலமாக செந்தில் குமாருக்கு பணம் சென்றடைந்ததா என்று நான் பார்த்தேனா என்றால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடமான பத்திரத்தில் மேற்படி தொகை ரூ.20லட்சத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ஒரு வட்டி வீதம் பிரதி மாதம் 4ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் வட்டிக்காக பணம் கொடுத்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை எங்களுக்கு சுவாதீனம் ஒப்படைத்ததாக கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுவாதீனம் தொடர்பாக வழக்குரையில் கூறியுள்ள விவரம் தெரியும். வழக்கு சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் தான் இருக்கிறோம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செந்தில்குமாரின் பெயரில் உள்ள ஆவணங்களையோ, சொத்தின் மூல ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கறிவிப்பில் கூறியுள்ள சிவக்குமார் என்பவர் மீது வழக்குரையில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். சிவக்குமாருக்கும், செந்தில்குமாருக்கும் விரோதம் எதுவும் கிடையாது. செந்தில்குமார் 2020ம் ஆண்டு இறந்தார். 19.07.2020 அன்று செந்தில்குமார் புரோநோட் எழுதி கொடுத்திருந்தார். குடும்ப செலவுக்கு பணம் வாங்கியதாக புரோநோட் எழுதப்பட்டுள்ளது. செந்தில்குமாருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் தெரியாது. 05.09.2018 அன்று அடமான கடன் பத்திரம் எழுதும்போதே ஒரு போக்கிய பத்திரம் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். அந்த போக்கிய பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அது பணத்திற்கு உத்தரவாதத்திற்கு எழுதப்பட்டது. ஆவண எழுத்தர் ராஜேந்திரன் அலுவலகத்தில் வைத்து போக்கிய பத்திரம் எழுதப்பட்டது. அடமான பத்திரம், போக்கிய உடன்படிக்கை மற்றும் கடனுறுதி சீட்டு ஆகியவற்றில் சிவக்குமார் சாட்சி

கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் போக்கிய பத்திரம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். போக்கிய பத்திரத்தில் காசோலை மூலமாக செந்தில்குமாருக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றும், ரொக்கமாக கொடுத்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைப்பார்க்க வேண்டும். அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை செந்தில் குமாருக்கு கொடுக்கப்படவில்லை சிவக்குமாரின் தூண்டுதலின் பேரில் மேற்படி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. அடமான கடன் பத்திரம், கடனுறுதி சீட்டு ஆகியவை உரிய மறுபயன் இன்றி எழுதப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் ரொக்கமாக பணம் கொடுத்ததாக தான் நான் சொல்லியுள்ளேன் என்றும் காசோலை மூலம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். செந்தில்குமார் மதுவுக்கு அடிமையானவர் என்றும், சிவக்குமாருக்கு அந்த சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக நாங்கள் மேற்படி ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி செந்தில்குமாரை விட்டு பிரிந்து 15 ஆண்டுகளாக தனியாக வசித்து வருகிறார் என்றால் தவறு. வழக்கு சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்பதால் செந்தில்குமாருக்கு தனியாக ஆவணம் எழுதிக்கொடுக்க உரிமை கிடையாது என்றால் சரிதான். தாவா பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2024.12.16 18:06:12 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.